பக்கங்கள் 23+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 14 திங்கட்கிழமை 01.12.2025 | அதிர்வு 124

## 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை!

சீரற்ற காலநிலையால் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பேரிடர் சாவுகள் 355 ஆக உயர்வு!

## மேலும் 366 பேர் மாயம்

இலங்கையில் புயல், வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 355 ஆக உயர்ந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

03

# முன்னாயத்தம் செய்யத் தவறி மக்களைக் கொன்றது அரசே!

## நாடாளுமன்றத்தில் சாணக்கியன் காட்டம்



“இந்தப் பேரிடர் உயிரிழப்புகள் ஒரு கொலை. இது தயார் நிலையில் இல்லாததால் நடந்த படுகொலை. மக்களை நீங்கள் படுகொலை செய்திருக்கின்றீர்கள். தயார் நிலையில் இல்லாமல் இருந்தமை மூலம் மக்களைப் படுகொலை செய்திருக்கின்றீர்கள்.”

- இப்படி இன்று நாடாளுமன்றத்தில் காட்டத்துடன் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் 03



# வெள்ளத்தில் சிக்கிய பஸ்ஸில் பயணித்த யாழ். இளைஞர் இன்று சடலமாக மீட்பு!









யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ், அனுராத புரம் கலா ஓயா பாலத்துக்கு அருகில் வெள்ளத்தில் சிக்கியதில் காணாமல்போன இளைஞர் மீட்கப்பட்டுள்ளார்.

4 நாட்கள் மேற்கொண்ட தேடுதலின் பின்னர் இன்று காலை அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 36 வயதான தணிகாசலம் பத்மநிகேதன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த 27 ஆமா திகதி இரவு கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ், அனுராதபுரம் - புத்தளம் வீதியில் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கியது. அதன்போது பஸ்ஸினுள் சுமார் 60 பேர் வரையில் பயணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக பஸ்ஸின் மேற்கூரையில் பாதுகாப்புத் தேடி நின்றவர்கள் அருகில் இருந் வீடொன்றின் கூரை மீது ஏற்றி பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் கடற்படையினரின் உதவியுடன் படகுகளில் ஏற்றப்பட்டு கடுமையான போராட்டத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் இந்த பஸ்ஸில் பயணித்த தணிகாசலம் பத்மநிகேதன் என்ற இளைஞர் காணாமல்போயுள்ளார் என்று உறவினர்கள் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

பஸ்ஸின் மேற்கூரையில் நின்றவர்கள் தொடர்பில் வெளியான காணொளி ஒன்றில் பத்மநிகேதன் காணப்பட்டார்.

அதேவேளை, வீட்டின் கூரையில் இருந்த வேளை கூரையின் ஒரு பகுதி உடைந்து விழுந்தது எனவும், அதன்போது சிலர் வெள்ளத்தில் விழுந்த நிலையில் அங்கிருந்தவர்களை அவர்களை மீட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வீட்டின் கூரையின் ஒரு பகுதி உடைந்தபோதே பத்மநிகேதன் வெள்ளத்தில் விழுந்து காணாமல்போய் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**6 மாவட்டங்களுக்கு...**

அதன்படி, பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மூன்றாம் கட்ட சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களை மிக அவதானத்துடன் செயற்படுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறித்த பகுதி மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.




# கிராமசேவையாளரை எம்.பி. தாக்குவதா? வேலணை சேவையாளர்கள் கவனவீர்ப்பு

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி – பரந்தன் கிராம சேவையாளரை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கினார் என்று கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து வேலணை பிரதேச கிராம சேவையாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலகம் முன்பாக இன்று காலை கறுப்பு பட்டி அணிந்தவாறு இந்த அடையாளப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் காரணமாக அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அந்த சூழ்நிலைமை காரணமாக, மக்களின் நலன் கருதி பணிப்புறக்கனிப்பை மேற்கொள்ளவில்லை. இருந்தபோதும் பாதிக்கப்பட்ட கிராம சேவையாள்சருக்கு நீதி வேண்டி அடையாளப் போராட்டம் மட்டும் மேற்கொள்கின்றோம் என அவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் அனர்த்த நிலைமை சீராகிய பின்பும் இவ்விடயத்திற்கு தீர்வு இல்லையேல் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பேரிடர் சாவுகள்...

மேலும், 366 பேர் காணாமல்போயுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் அதிகபட்சமாக 88 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 75 பேரும், பதுளை மாவட்டத்தில் அதிகபட்சமாக 71 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 37 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கண்டி மாவட்டத்தில் 150 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 62 பேரும், பதுளை மாவட்டத்தில் 53 பேரும் காணாமல்போயுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, 25 மாவட்டங்களில் 3 இலட்சத்து 18 ஆயிரத்து 252 குடும்பங்களைச் சேர்ந்த 11 இலட்சத்து 56 ஆயிரத்து 860 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன் 1,529 பாதுகாப்பு தங்குமிடங்களில் 59 ஆயிரத்து 266 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 9 ஆயிரத்து 568 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

### முன்னாயத்தம்...

இன்று காலை நாடாளுமன்றம் கூடியதும் இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் குறித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு அனுமதிக்கும்படி எதிர்க்கட்சிகள் அரசு தரப்பைக் கோரினர். அதற்கு அரசு தரப்பு இணங்க மறுத்தமையை அடுத்து, எதிர்க்கட்சியினர் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய பின்னர் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதன் காரணமாக சபை நடவடிக்கைகள் நாளைமறுதினம் புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இன்று தமது உரையில் சாணக்கியன் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

"எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அனைத்துக் கட்சிகளாலும் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக தமிழரசுக் கட்சியினராகிய நாங்களும் இந்தச் சபை அமர்விலே இருந்து வெளியேறுவதற்கு முடிவெடுத்துள்ளோம்.

இந்தத் தீர்மானத்துக்கான முக்கிய காரணம் வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாது நாடு முழுவதிலும் இந்த இயற்கை அனர்த்தத்தால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டு உயிரிழந்த மக்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் 30.11.2025 மாலை 6 மணிக்குப் பின்னர் அரசாங்கத்தால் அறிக்கைப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் நாங்கள் அனைவரும் ஓர் அணியாக நின்று இன்றைய நாளில் எம் மக்களது குறைபாடுகள், நிவாரணப் பணிகளை நாம் எவ்வாறு மேற்கொள்ளலாம், எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்க வேண்டும்.

மாவிலாறு அணைக்கட்டு உடைந்து திருகோணமலையில் பெரும் பாதிப்பு.

மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு எம் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வந்துள்ளோம்.

எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய கட்சி எமது தமிழரசுக் கட்சி. வடக்கு, கிழக்கிலே உள்ளூராட்சி மன்றங்கள் எமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கின்றன. அரசாங்கம் நடைமுறைப்படுத்தவிருக்கின்ற செயற்பாடுகளில் உள்ளூராட்சி மன்றங்களும் பங்களிப்புச் செய்ய வேண்டும். எங்களது உதவியை நீங்கள் எவ்வாறு பெற்றுக்கொள்ளப் போகின்றீர்கள்? நாங்கள் பல சர்வதேச தொடர்புகளைக் கொண்ட கட்சி. எமது வடக்கு, கிழக்கிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நிவாரணங்களை வழங்குவது என்பது தொடர்பாகப் பேசுவதற்கு இன்றைய அமர்வை ஒரு சில மணித்தியாலங்கள் ஒதுக்கித் தரும்படியே கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், அதுக்கான அனுமதி மறுக்கப்பட்டது.

இரண்டு நாள்களுக்குப் பின்பு வரவு – செலவுத் திட்டத்தை விவாதமே இல்லாமல் அப்படியே அமுலுக்குக் கொண்டு வர ஆதரவு தெரிவிப்போம் என நாங்கள் இணங்கியிருந்தோம். அதைக் கூறியும் நீங்கள் அதற்கு (இன்றைய நாளில் உடனடிப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு) இணங்கவில்லை.

இன்று முழு நாள் விவாதம், ஆகக் குறைந்தது மாலை 6 மணி வரை ஆறு மணி நேரம் தந்திருந்தால் எங்களுடைய மாவட்டங்களில் இருக்கும் உடனடிப் பிரச்சினைகளைச் சொல்லியிருக்கலாம்.

இன்று மத்திய மாகாணத்தில் எங்களுடைய தமிழ்ப் பேசும் உறவுகள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். சில கிராமங்கள் முழுமையாக இல்லாமல் போயிருக்கின்றன. இவர்களைப் பற்றி நாங்கள் பேச வேண்டும்.

இது ஒரு கொலை. இது தயார் நிலையில் இல்லாததால் நடந்த படுகொலை. மக்களை நீங்கள் படுகொலை செய்திருக்கின்றீர்கள். தயார் நிலையில் இல்லாமல் இருந்தமை மூலம் மக்களைப் படுகொலை செய்திருக்கின்றீர்கள்.

மக்களது பிரச்சினையை முன் வைக்க எமக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. பொருத்தமற்ற இந்தச் செயன்முறையின் காரணமாக மக்களுக்கு உண்மை தெரிந்து விடுமோ என அரசாங்கம் பயப்படுகின்றது." – என்றார்.



# வடக்கின் அவசர தேவை அடங்கிய விவரம் ஜனாதிபதிக்கு ஆளுநரால் அனுப்பிவைப்பு








வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட அவசர தேவைகள் அடங்கிய விவரங்கள் உடனடியாகத் தொகுக்கப்பட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆளுநர் நா.வேதநாயகனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில், ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களுடனான விசேட அவசர கலந்துரையாடல் இணையவழியாக இடம்பெற்றது.

இதன்போது, இடருக்குப் பின்னரான காலப்பகுதியில் அந்தந்த மாகாணங்களில்முன்னெடுக்கப்படவேண்டியவேலைத் திட்டங்கள் குறித்து ஜனாதிபதியால் ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன், மாகாணங்களின் தற்போதைய களநிலவரம் குறித்தும் ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாணத்தின் நிலைவரம் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளித்த ஆளுநர் நா.வேதநாயகன், பின்வரும் விடயங்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான பிரதான போக்குவரத்துப் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளமை, பல்வேறு பகுதிகளில் தொலைத்தொடர்பு மற்றும் மின்சார விநியோக நடவடிக்கைகள் இன்னும் வழமைக்குத் திரும்பாதமை, பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளை அவர் கூறினார்.

வடக்கு ஆளுநரின் கோரிக்கைகளைச் செவிமடுத்த ஜனாதிபதி, உடனடியாகச் சீர்செய்யப்பட வேண்டிய அவசர விடயங்களைப் பட்டியலிட்டு, ஒரு மணி நேரத்துக்குள் அனுப்பி வைக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக, வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட அவசர தேவைகள் அடங்கிய விவரங்கள் உடனடியாகத் தொகுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் ஐந்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள திணைக்களங்கள் ஊடாக, மாகாண ரீதியான முழுமையான பாதிப்பு விவரங்களைத் தொகுக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீவகத்துக்கான போக்குவரத்து வழமைக்கு!

யாழ்ப்பாணத்தில் இருந்து நயினா தீவுக்குப் பயணிப்பதற்கான போக்குவரத்து சேவைகள் மற்றும் படகு சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக தீவகங்களுக்கான கடல் வழிப் போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டன.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை முதல் சீரான காலநிலை நிலவுதனால் தீவகத்துக்கான கடல் வழிப் போக்குவரத்துச் சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதேவேளை, குறிகாட்டுவான் இறங்கு துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.






# மீட்பு நடவடிக்கையில் பாகிஸ்தான் ஹெலி!

பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று கொலன்னாவா, வெல்லம்பிட்டிய மற்றும் கம்பஹா பகுதிகளில் வெள்ளத்தில் சிக்கியிருந்த சிலரைப் பாதுகாப்பாக மீட்டெடுத்துள்ளது.

மீட்பு நடவடிக்கைகளுடன் இணைந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தில் குறித்த பாகிஸ்தான் ஹெலிகொப்டர் ஈடுபட்டு வருகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மோசமாகப் பாதிக்கப்பட்ட

# சிலாபம் வைத்தியசாலை மறு அறிவித்தல் வரை மூடல்

சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட சிலாபம் பொது வைத்தியசாலை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுமித் அத்தநாயக்க தெரிவித்தார்.

வைத்தியசாலை தற்போது வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என்றும், வைத்தியசாலைக்குள் ஐந்து அடிக்கும் மேல் நீர் நிறைந்துள்ளது என்றும் வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தீவிர சிகிச்சைப் பிரிவு நோயாளிகள் ஹெலிகொப்டர்கள் மூலம் கொழும்பு மற்றும் புத்தளம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும், ஏனைய நோயாளிகள் வெள்ளநீர் ஓரளவு குறைந்தத நிலையில் கடற்படை மற்றும் இராணுவத்தின் உதவியுடன் வாரியபொல மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் கூறினார்.

வைத்தியசாலை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மீண்டும் திறக்க வாய்ப்புள்ளதாகவும், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று கூற முடியாது என்பதனால், மறு அறிவித்தல் வரும் வரை எந்தவொரு நோயாளியையும் சிலாபம் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதைத் தவிர்க்குமாறும் வைத்தியசாலை பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இழப்புகளுக்கு பொறுப்பு

முழு நாடும் பேரழிவுக்கு உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது என்று நாட்டு மக்களுக்கு நேற்று உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா குறிப்பிட்டிருக்கின்றார். இந்தப் பத்தியில் அதை ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

இத்தகைய பேரிடர் - பேரனர்த்தம் - இலங்கையில் அதிகரித்து வருவதைப் புள்ளிவிவரங்கள் ருசுப்படுத்துகின்றன. அதன் உச்சமே இப்போது அரங்கேறியிருக்கின்றது.

இதற்கு முன்னர் கடந்த மூன்று ஆண்டுகளில் பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளமெள தெரியவந்துள்ளது.

தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள தணிக்கை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் - அதாவது 2022 முதல் 2024 வரையான காலப் பகுதியில் - நிலச்சரிவுகளைத் தவிர, வெள்ளம், பலத்த காற்று போன்ற பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தேசிய பேரிடர் திட்டத்தைத் தயாரித்து, அதிக அபாயங்களுக்கு முன்னுரிமை அளித்து, பேரிடர் தணிப்பு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று தணிக்கை பரிந்துரைத்துள்ளது.

பேரிடர் மேலாண்மை மையம் மற்றும் பேரிடர் தணிப்புக்காக பெறப்பட்ட ஒதுக்கீடுகளால் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியாது என்று பேரிடர் மேலாண்மை மையம் தொடர்பான தணிக்கை அறிக்கை தெரிவித்துள்ளது.

இப்போதைய அனர்த்தம் சுமார் ஆயிரம் பேரின் உயிர்களைக் காவு கொண்டுளது என்று கூறப்படுகின்றது.

இந்த அனர்த்தத்தில் இத்துணை உயிர்கள் காவு கொள்ளப்பட்டமை - கொல்லப்பட்டமை - 'முன்னாயத்தம் செய்யாதமையினால் இழைக்கப்பட்ட படுகொலை' என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இன்று நாடாளுமன்றத்தில் நேரடியாக அரசு மீது குற்றம் சுமத்தியமை கவனிக்கப்பட வேண்டும்.

தேசியப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான முழு ஆயத்த நிலையில் நாடும் அரசும் தயாராக இருப்பது மிக முக்கியமான விடயமாகும். அதில் தவறிழைத்தால் அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு - இழப்புகளுக்கு - அரசே பதிலும் பொறுப்பும் கூற வேண்டியிருக்கும்.



# பேரிடரால் நுவரெலியா மாவட்டத்தில் 75 பேர் சாவு; 62 பேரைக் காணோம்!

## 12 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்குப் பாதிப்பு

(க.கிஷாந்தன்)

சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் ,துவரை 75 பேர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் 62 பேர் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 2,691 குடும்பங்களை சேர்ந்த 12,304 பேர் ,ந்த மோசமான காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

,தில் 1,914 குடும்பங்களைச் சேர்ந்த 8,654 பேர் பாதுகாப்பான 61 தற்காலிக தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள், உணவு மற்றும் பிற அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும், மேலும் பரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் தாங்கள் உள்ள பகுதிகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும், நுவரெலியா நோக்கி பயணம் மேற்கொண்டுள்ளவர்கள் நிலைமை சீராகும் வரை பாதுகாப்பான ,டங்களில் தங்கியிருப்பது அவசியம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.









# உணர்வுடனே செயற்பட்டு உதவிடுவோம் யாவர்க்கும்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ண், ஆஸ்திரேலியா)

கொடுப்பதும் மழை கெடுப்பதும் மழை
அடுத்தடுத்து பெய்து அழிவைக் கொடுப்பதா
நீரின்றி வாடினார் நீருக்காய் ஓடினார்
நீராலே மக்கள் நிலம்விட்டோ ஓடுகிறார்

தயையின்றி மழை நிலமதை விழுங்கிறது
நிலையிழந்து மக்கள் நிர்க்கதியாய் நிற்கின்றார்
உயிருடமை மண்ணுக்குள் புதையுண்டு போகிறது
ஓலமிடும் பேரொலியே உலுக்கியே நிற்கிறது

பாலகரும் பறிபோனார் வாலிபரும் மண்புதைந்தார்
ஓலமிடும் உறவெல்லாம் உணர்விழந்து நிற்கின்றார்
காலனுக்கு கண்ணிலையா கதியற்று கதறுகிறார்
காலநிலை யமனாகி காவுகொண்டு போகிறதே

மழைவேண்டிக் கோவிலில் மண்டியிட்டார் மக்கள்
மழவெள்ளம் கோவிலை விழுங்கிடவே வருகிறதே
அலைந்துலையும் மக்களை ஆண்டவனே காப்பாற்று
ஆதாரம் நீயென்று அழுகின்றார் அனைவருமே

நல்மனத்தைக் கொண்டவர் ஓடோடி வருகின்றார்
கல்மனத்தைக் கொண்டவர் கைகட்டி நிற்கின்றார்
விளம்பரத்தை நாடுவார் வேகமாய் வருகின்றார்
கொடுப்பதாய் நடித்து எடுக்கின்றார் படமெல்லாம்

எரிகின்ற வீட்டை எட்டநின்று பார்ப்பதுபோல்
இருக்கின்ற தலைமைகளும் எட்டியே நிற்கின்றார்
செல்வாக்கை நிலைநாட்டும் பாங்கினிலே அவர்கள்
செய்கின்ற அத்தனையும் தீங்காகும் அவர்கட்கே

பாசாங்கு செய்யாமல் பக்குவமாய் உதவுவார்
பலபேர்கள் வந்து கைகொடுத்து நிற்கின்றார்
உதவும் மனங்களை உளமார வாழ்த்துவோம்
உணர்வுடனே செயற்பட்டு உதவிடுவோம் யாவர்க்கும்!





# விரைவில் இயல்புநிலை திரும்ப தருமபுரம் ஆதீனம் பிரார்த்தனை

புயலால் பாதிப்புற்ற இகங்கையில் விரைவில் இயல்புநிலை திரும்ப பிரார்த்தித்து, இந்தியா தருமை ஆதீனம் 27 ஆவது நட்சத்திர குருமணிகள் நட்சத்திர ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:–

இவ்வாரம் பெருமழை, டித்வா புயல் இலங்கை மக்களை பரிதவிக்க விட்டுள்ளது. இயற்கையின் கோரத் தாண்டவம் பல உயிர்களைப் பலி கொண்டதும், பலர் காணாமல் போனதும் மிகவும் மனவேதனையை அளிக்கின்றது. இலங்கை மக்கள் எத்தனை, எத்தனை இடர்பாடுகளை சோதனைகளை சந்திக்கின்றார்கள். பல உயிர் இழப்புகள். பெருமளவிலான பொருள்சேதம். எமது மக்கள் தமது உறவுகளையும் உடைமைகளையும் இழந்து சொல்லிலடங்காத துயரடைந்துள்ளார்கள். பாதிப்புக்குள்ளான எம் சேய்நாட்டு மக்களுக்கு ஆறுதலைக் கூறுகிறோம். மரணித்த அனைவரது ஆத்ம ஈடேற்றத்திற்கு இறைவனை பிரார்த்தனை செய்கிறோம். உடல், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்ட அனைவரும் விரைவில் நலம் பெற வேண்டும். இவர்கள் இத்துயரத்திலிருந்து மீண்டுவர இறைவனை பிரார்த்தனை செய்கிறோம்.

சேய் நாடாகிய இலங்கை மக்களுக்கு இந்திய அரசு உடனடியாக உதவி புரிந்தும் மீட்புப் பணியிலும் களப் பணியாற்றுவது மனதிற்கு ஆறுதலாக உள்ளது. பாரத அரசிற்கு இத்தருண உதவிக்காக நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

தமிழகத்திலும் பலரும் பாதிக்கப் பட்டுள்ளனர். விவசாய பயிர்கள் மூழ்கியுள்ளன. நிவாரணம் அரசு அளித்து ஆதரிக்கவேண்டும்.

ஆதிபௌதிகம், ஆதிஆத்மிகம், ஆதிதெய்வீகத்திலிருந்து உலகிலுள்ள உயிர்களை காத்திட இறைவனை பிரார்த்திக்கிறேன்.

– என்று உள்ளது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# வட்டுவாகல் பாலம் இரு துண்டுகளாகப் பிளவு முற்றிலுமாகத் தடைப்பட்டது போக்குவரத்து!

**(பா.சதீசன்)**

பரந்தன் – புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவு யு35 வீதி இரண்டாக பிளவுபட்டிருப்பதால் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களாகப் பெய்த கனமழையால் நீர்மட்டம் உயர்வடைந்து, பரந்தன் – புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவு யு35 வீதி வட்டுவாகல் பாலம் இரு துண்டுகளாக பிளவடைந்து நீர் பாய்கின்றது. இதனால் அந்த வீதி யுடனான போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டுள்ளது.

எனவே தேவையின் நிமித்தம் முல் லைத்தீவிற்கு பயணம் செய்வோர் புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வழியான மாற்று வழியினை பயன்படுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ மையம் அறிவுறுத்தல் வழங்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.














# வெள்ளத்தில் சிக்கிய விவசாயிகளை மீட்டெடுத்தனர் குமுழமுனை மக்கள்

வெள்ளத்தில் சிக்கிய விவசாயிகளை மக்கள் ஒன்று சேர்ந்து படகு மூலம் பாதுகாப்பாக மீட்டெடுத்த சம்பவம் ஒன்று குமுழமுனைக் கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவில் பெய்த கனமழை காரணமாக முல்லைத்தீவு குமுழமுனை நித்தகைகுளம், ஆண்டான் குளம் கிராமத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வயலுக்குச் சென்ற விவசாயிகள் வீடுவந்து சேராத நிலையில் அவர்களது தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து வெள்ளத்தில் சிக்கிய விவசாயிகளை அளம்பில் அன்னை வேளாங்கன்னி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், மயூரன், அருள்ராஜ் படகின் உதவியுடன் குமுழமுனை மக்கள், இளைஞர்கள் இணைந்து ஊடகவியலாளர் பா.சதீஸ் உதவியுடன் சென்று வெள்ளத்தில் சிக்கிய விவசாயிகளைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையில் ஒரு சிறுவன் உட்பட ஏழு விவசாயிகள் காப்பாற்றப்பட்டு மீட்டெடுக்கப்பட்டனர்.

ஆண்டு தோறும் இப்பகுதியில் தொடர்ச்சியாக வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு வருவதனால் இந்த உயிர்காப்பு நடவடிக்கைக்காக இஞ்சின் படகு ஒன்றும், பாதுகாப்பு கவசங்களும் அரசினால் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என மீட்பு பணியின் பின்னர் குமுழமுனை மக்கள் கோரிக்கை விடுத்தனர்.















# முல்லைத்தீவு நாயாற்றுப் பாலமும் பெரு வெள்ளத்தில் கீழிறங்கியது!

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு நாயாற்றுப் பாலமும் தொடர்ச்சியாக பெய்த மழையினால் ஏற்பட்ட பெரு வெளத்தில் கீழிறங்கியது. அதனால் அந்தப் பாலம் ஊடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

அண்மைய சில நாள்களாகத் தொடர்ச்சியாகக் கனமழை பெய்து வருவதனால் கடல் நீர்மட்டமானது உயர்வடைந்த நிலையில், முல்லைத் தீவு கொக்குளாய் – திருகோணமலை பிரதான வீதியிக் செம்மலைப் பகுதியில் உள்ள நாயாற்றுபாலம் முற்றாகக் கீழிறங்கியுள்ளது.

இதனால் முலைத்தீவுப் பக்கத்திலிருந்து கொக்குளாய், கொக்குதொடுவாய், கருநாட்டுக்கேணி, திருகோணமலைப் பகுதிகளுக்கான போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டுள்ளது.













# முல்லையில் கடற்சீற்றம் குறைகின்றது

(பா.சதீசன்)

முல்லைத்தீவில் கடல் சீற்றம் தற்போது குறைவடைந்து செல்வதுடன் கடலலை அதிகமாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

தற்பொழுது நிலவும் சீரற்ற கால நிலையினால் அதிக காற்றுடன் கூடிய மழை கிடைக்கப்பெற்றுள்ளது. இதன்போது கடலலையின் சீற்றம் அண்ணளவாக 10 அடிக்குமேல் உயர்ந்து கடல் எது கரை என தெரியாத அளவுக்கு அதிகரித்து காணப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது முன்னைய நாள்களை விட காற்றின் அளவும் மழையும் குறைவடைந்ததனால் முல்லைத்தீவு கடற்கரையின் சீற்றம் சற்று குறைவடைந்து செல்வதுடன் கடலலை கூடுதலாக இருக்கின்றது. எனினும் தேவையற்ற வகையில் கடற்கரைக்கு செல்வதனை இயன்ற வரை தவிர்ப்பதும், தொழில் நிமித்தம் செல்லும் மீனவர்கள் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுவது சிறந்ததாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.






# 12 தொன் நிவாரண உதவிப் பொருள்களுடன் திருகோணமலையை வந்தடைந்தது சுகன்யா!

(எஸ்.கீதபொன்கலன்)

இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். சுகன்யா என்ற கப்பல், திருகோணமலை மாவட்டத்தில் தற்போதைய அனர்த்த நிலைகளால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வழங்குவதற்கான 12 தொன் நிவாரண உதவிப் பொருள்களுடன் இன்று (01) காலை 10 மணிக்கு திருகோணமலை அஸ்ரப் இறங்கு துறையை வந்தடைந்தது.

இந்தக் கப்பலை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தின் துணைத்தூதர் சாய் முரளி, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்தணசேகர, கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளைத் தளபதி ரவீந்திர திசேரா, மாவட்ட அரச அதிபர், மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ஆகியோர் இறங்கு துறையில் வைத்து வரவேற்றனர்.

இதனை அடுத்து இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கடற்படை கப்டன் முகுந், இலங்கையின் கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளைத்தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திர திசேராவிடம் நிவாரண பொருள்களை இறங்கு துறையில் வைத்து ஒப்படைத்தார்.

'சமுத்திரத்தில் தோழமை' (சாஹர் பந்து) என்ற உதவித்திட்டத்தின் கீழ் உணவுப்பொருட்கள், மருந்து பொருள்கள், குடிதண்ணீர், படுக்கை விரிப்புக்கள், சுகாதார சுத்திகரிப்பு பொருள்கள், உடைகள், துவாய்கள், பெண்களுக்கான சுகாதார துவாய்கள் கொண்ட இந்த நிவாரண பொருள்கள் அடங்கிய தொகுதி வழங்கப்பட்டுள்ளது.










# கடல் பெருக்கு மற்றும் மழை வெள்ளத்தால் கோவிற்குடியிருப்பில் 60 குடும்பங்கள் பாதிப்பு

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்புக் கிராமத்தின் உதயசூரியன், மகிழங்கேணிப் பகுதிகளில் வசித்த மக்கள் கடல் பெருக்கு மற்றும் மழை வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

64 குடும்பங்களைச் சேர்ந்த 192 பேர் இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு அருகில் உள்ள பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை பிரதேச செயலகம், கிராம அபிவிருத்திச் சங்கம், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரிப் பொலிஸ் நிலையம், இராணுவம், வர்த்தக சங்கம் ஆகியன இணைந்து பூர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வெள்ளத்தில் பாதிப்புற்ற அம்பிளாந்துறை வீதி தற்காலிகமாகப் புனரமைப்பு நடவடிக்கை!



(மட்டக்களப்பு நிருபர்)

வெள்ளத்தில் பாதிப்புற்ற அம்பிளாந்துறை – வீரமுனை பிரதான வீதி தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல வீதிகள் சேதமடைந்துள்ளன. இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான படுவாங்கரைப் பெருநிலப்பரப்பை ஊடறுத்துச் செல்லும் அம்பிளாந்துறை – வீரமுனை பிரதான வீதி பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த நிலையில் இந்த வீதியின் புனரமைப்பு குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள் நேரடி கள விஜயம் மேற்கொண்டு மதிப்பீடு செய்து வருகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் இவ்வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியிருந்ததால் இவ்வீதியுடனான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிரயாணிகள் இவ்வீதியை தற்காலிகமாக பயன்படுத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவிக்கின்றர்.

தற்போதைய நிலையில் குறித்த வீதியில் வெள்ளம் வடிந்துள்ளதால் இந்த வீதியினூடாக மக்கள் அச்சமின்றி பயணம் செய்ய முடியும் எனவும், இந்த வீதியின் நிரந்தரமாக திருத்தியமைக்கும் பணி விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

# பேசாலை புனித வெற்றி அன்னையின் பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்



( வாஸ் கூஞ்ஞ)

கிறிஸ்து பிறப்பின் 2025 ஜூபிலியில் பேசாலை புனித வெற்றி அன்னையின் ஆலய வருடாந்த பெருவிழா சனிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 07 ஆம் திகதி வரை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி வழிபாடுகள் நடைபெறும். 08ஆம் திகதி திங்கள்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாவது திருப்பலியும் பெருவிழா திருப்பலியானது காலை 7 மணிக்கும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்து நேசன் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்தப் பெருவிழாவை முன்னிட்டு நடைபெறும் நவநாள்களில் இறை மக்களின் இறை சிந்தனைகளின் மையப்பொருளாக நேற்று முன்தினம் சனிக்கிழமை 'புதுப்பார்வை பெறுவதே 2025 ஜூபிலியின் நோக்கம்' நேற்று ஞாயிற்றுக்கிழமை 'கடவுள் விரும்பும் குடும்பங்களாவோம்' இன்று திங்கள் கிழமை 'கடவுளின் வார்த்தை வல்லமையுள்ளது' என்றும் தலைப்புகளில் இறை சிந்தனை இடம்பெற்றது.

நாளை செவ்வாய் கிழமை 'உங்களை தூய்மையாக்குங்கள் நாளை அற்புதங்கள் நடக்கும்' 5 ஆம் நாள் புதன் கிழமை 'கடவுளைத் தாங்கிய திருவுதரம் பேறுபெற்றது' 6 ஆம் நாள் வியாழக்கிழமை 'நீ எனக்கு உரியவன் நீ எனக்கு உரியவள்' 7ஆம் நாள் வெள்ளிக் கிழமை 'முழு உண்மைக்கு வழிநடத்தும் தூய ஆவியானவர்' 8ஆம் நாள் சனிக்கிழமை 'நம்பிர்கையே வாழ்வின் அஸ்திவாரம்' 9ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 'நற்கருணையே நம் நம்பிக்கை வாழ்வின் ஊட்டச்சத்து' 10ஆம் நாள் திங்கள் கிழமை பெருவிழா மையப்பொருளாக 'எதிர் நோக்கின் திருப்பயணத்தில் எம்மோடு பயணிக்கும் வெற்றி அன்னை' என்றும் தலைப்புகளில் நற்சிந்தனை இடம்பெறும்.

இந்த நாள்களில் மறையுரையாளர்களாக கிறேசியன் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் வரதன் அடிகளார், அன்ரனி பெர்னாண்டோ அடிகளார் மற்றும் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநேசன் அடிகளார் ஆகியோர் செயற்படுவர்.





# மறவன்புலோவில் தற்காலிக குடிசைகளில் வசித்து வரும் குடும்பங்களுக்குத் தறப்பாள்

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மறவன்புலோ மத்திய மற்றும் மேற்கு பகுதிகளில் தற்காலிக குடிசைகளில் வசித்து வரும் 5 குடும்பங்களுக்கு தறப்பாள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் ஆகியவற்றின் கோரிக்கைக்கு அமைவாக பிரதேச அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



# தரைவழி பாதை துண்டிக்கப்பட்டு மன்னார் குஞ்சுக்குளம் கிராமம்!

## ஹெலி ஊடாக உலர் உணவு, மருந்துப் பொருள்கள் அனுப்பி வைப்பு

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர். லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக தரைவழிப்பாதை முழுமையாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு கடந்த மூன்று தினங்களுக்கு பின்னர் இன்று திங்கட்கிழமை காலை ஒரு தொகுதி உலர் உணவு மற்றும் மருத்துவ பொருள்கள் விசேட ஹெலி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்ட நிலையில் குஞ்சுக்குளம் கிராம மக்கள் கடந்த மூன்று தினங்களாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்ததோடு, மருத்துவ தேவைகளையும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசா அதிபர் க.கனகேஸ்வரனின் நடவடிக்கையை அடுத்து மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் இன்று விமானப்படைக்கு சொந்தமான ஹெலி ஊடாக ஒரு தொகுதி உலர் உணவுகள் மற்றும் மருத்துவ பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

குஞ்சுக்குளம் மற்றும் மாதா கிராம பகுதியில் சுமார் 304 குடும்பங்களைச் சேர்ந்த 133 நபர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலை, ஆலயம், பொது மண்டபங்களில் தங்கியுள்ளனர். இந்த நிலையில் குறித்த உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருத்துவப் பொருள்களும் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், உதவி அரச அதிபர் எம்.பிரதீப் மற்றும் பணியாளர்கள் இணைந்து குறித்த பொருள்களை ஹெலி ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்.



# சீரற்ற காலநிலை, டித்வா புயல் காரணமாக திருமலையில் 22,232 குடும்பங்கள் பாதிப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்.)


சீரற்ற கால நிலை மற்றும் டித்வா புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 22 ஆயிரத்து 232 குடும்பங்களை சேர்ந்த 72 ஆயிரத்து 254 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய 212 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து இன்று மதியம் 12 மணி வரையான தகவலின் அடிப்படையில் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 561 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 17004 குடும்பங்களை சேர்ந்த 56479 நபர்கள் உறவினர்கள் மற்றும் சொந்த வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 61 பாதுகாப்பான தற்காலிக முகாம்களில் 5228 குடும்பங்களை சேர்ந்த 15775 பேர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 519 குடும்பங்களை சேர்ந்த 1844 நபர்களும், தம்பலகாமம் 448 குடும்பங்களைச் சேர்ந்த 1373 நபர்களும், மொறவெவ 129 குடும்பங்களை சேர்ந்த 403 நபர்களும், சேருவில 805 குடும்பங்களை சேர்ந்த 2287 நபர்களும், வெருகல் 1745 குடும்பங்களை சேர்ந்த 5210 நபர்களும், மூதூர் 6941 குடும்பங்களை சேர்ந்த 22378 நபர்களும், கிண்ணியா 4932 குடும்பங்களை சேர்ந்த 16339 நபர்களும், கோமரங்கடவல 304 குடும்பங்களைச் சேர்ந்த 942 நபர்களும், பதவி ஸ்ரீபுர 391 குடும்பங்களை சேர்ந்த 1242 நபர்களும், குச்சவெளி 5732 குடும்பங்களை சேர்ந்த 19255 நபர்களும், கந்தளாய் 286 குடும்பங்களை சேர்ந்த 981 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவிலாறு அனைக்கட்டு உடைப்பெடுத்ததன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதுடன் மீட்பு நடவடிக்கைகளில் முப்படையினர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். வான்வழி மூலமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்காக சேவையைப் படையினர் வழங்கி வருகின்றனர்.



# வெல்லாவெளி பகுதி வயல்நிலங்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு போயின!



(மட்டக்களப்பு நிருபர்)

வெல்லாவெளி பகுதியில் பல நூற்றுக்கணக்கான வயல்நிலங்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் இம்முறை மேற்கொள்ளப்பட்டிருந்த பெரும்போக வேளாண்மைச் செய்கையில் ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்துக்கு உட்பட்ட வேத்துச்சேனை, வட்டவளை, நாதனை வெளி, ஓட்டடிமுன்மாரி உள்ளிட்ட பல வயற்கண்டங்களில் பல நூற்றுக் கணக்கான வயல் நிலங்கள் இவ்வாறு வெள்ளத்தில் அள்ளுண்டு முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளப்பெருக்கால் வயல்வெளிகள் அனைத்தும் உடைப்பெடுத்து மீதமுள்ள நெல் நாற்றுக்கள் மண்ணுக்குள் புதையுண்டுள்ள இந்த நிலையில் விவசாயிகள் உடைப்பெடுத்துள்ள வரம்புகளை திருத்தி சீரமைத்து வருகின்றனர்.

வெள்ள நீர் வடிந்து கொண்டிக்கின்ற இந்த நிலையில் வயல் பாதிப்புகள் தொடர்பில் தற்போதைய நிலையில் தொலைபேசி இணைப்புக்கள் சீராக கிடைக்கப்பெறாத போதும், விவசாய அமைப்புக்களூடாக பாதிப்பின் நிலவரங்கள் தொடர்பில் தரவுகளைச் சேகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்று அந்தப் பகுதி பெரும்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.




# ஹட்டன்–கொழும்பு பிரதான வீதியில் மண் மேடு அகற்றும் பணி ஆரம்பம்!

**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியின் ஹட்டன் ரொசல்ல மற்றும் ஹட்டன் செனன் பகுதியில் சரிந்து காணப்பட்ட மண்மேடுகளை அகற்றும் பணிகள் இன்று முன்னெடுக்கப்பட்டன.

ஹட்டன் டிக்கோயா நகரசபை வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து இந்த மண்மேட்டை அகற்றும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன் ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் உள்ள மண் மேடுகளை அகற்றப்பட்டாலும் ஹட்டன் கொழும்பு பிரதான வீதியின் குயில்வத்தை பகுதியில் வீதி தாழ்இறங்கி உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் காணப்படும் மண் மேட்டை முலுமையாக அகற்றியதன் பின்னர் வாகனங்கள் பயணிப்பதற்கான வழிமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.





# மூதூருக்கு ஹெலிக்கொப்டர் மூலம் நிவாரண உதவி!

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டம், மூதூர் உள்ளிட்ட வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப் பொருள்கள் இன்று திங்கட்கிழமை பெல் – 412 ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டு வரப்பட்டது.

சாதாரணமாக ஏஜெீ பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்தபெல் – 412 ஹெலிக்கொப்டர் தற்போதைய அவசரநிலையை முன்னிட்டு இலங்கை விமானப்படை நிவாரண நடவடிக்கைகளுக்காக விசேடமாக பயன்படுத்தி வருகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் தாமதமின்றி சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விமானம் மூலம் மூன்று கட்டங்களாக நிவாரண சரக்குகளை அனுப்ப இலங்கை விமானப்படை திட்டமிட்டுள்ளது.ன

அதன் மூலம் இன்று திருகோணமலை – மூதூர் அல்-ஹிலால் மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நிவாரணப் பொருட்களுடன் ஹெலிக்கொப்டர் பாதுகாப்பாக தரையிறங்கியது. இதில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான உலருணவு, குடிதண்ணீர், மருந்துகள் மற்றும் பிற அத்தியாவசிய பொருள்கள் அடங்கியிருந்தன.

அதிகாரிகள், தொடர்ச்சியாக மேலும் இரு கட்ட நிவாரண சரக்குகள் விரைவில் வானூர்தி மூலம் அனுப்பப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

# நானாட்டான் பிரதேச மக்களுக்கு அவசர உதவிகள் கிடைக்கவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாடு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கான சமைத்த உணவுகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட போதும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய வகையில் சமைத்த உணவுகள் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட மற்றும் வெள்ளப் பகுதியில் இருந்து வெளி வர முடியாத மக்களுக்கு கடற்படையினரின் உதவியுடன் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்ட அரச அதிபரின் ஆலோசனைக்கு அமைய மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மாவட்டத்தில் தொடர்ச்சியாக துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் பொலிஸார், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையினர் தொடர்ச்சியாக மக்களின் பாதுகாப்புக்காக செயல்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட இடம் பெயர முடியாத மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவுகள் உரிய முறையில் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் அப்பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து பாதிக்கப்பட்டு இக்கட்டான நிலையில் உள்ள மக்களுக்கான சமைத்த உணவை வழங்கத் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று திங்கட்கிழமை மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. எனவே மக்களின் அவசர நிலையை கவனத்தில் கொண்டு அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புத்தளத்தில் 47,222 குடும்பங்கள் வெள்ள அனர்த்தத்தில் பாதிப்பு!

## அங்கு மட்டும் 10 பேர் மரணம்!!



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

நாட்டின் திடீர் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் பலத்த காற்றின் தாக்கத்தால் புத்தளம் மாவட்டத்தில் 47ஆயிரத்து 222 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று புத்தளம் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் புத்தளம் மாவட்டத்தில் 301 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட 47ஆயிரத்து 222 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று புத்தளம் மாவட்ட செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்தோடு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் 3052 குடும்பங்களைச் சேர்ந்த 10994 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 பாதுகாப்பு நிலையங்களில் 351 குடும்பங்களைச் சேர்ந்த 1203 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அனர்த்தத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 4 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 76 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 13 ஆயிரத்து 4 குடும்பங்களை சேர்ந்த 47ஆயிரத்து 939 பேர் குறித்த மாவட்டத்தில் அதிகளவாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிலாபம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 9 ஆயிரத்து 214 குடும்பங்களை சேர்ந்த 35 ஆயிரத்து 943 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆராச்சிகட்டுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 8 ஆயிரத்து 923 குடும்பங்களை சேர்ந்த 31 ஆயிரத்து 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.



# ஆபத்தான வீடுகளில் வசிப்பவர்களுக்கு பாதுகாப்பான வீடுகள் வழங்கப்படவுள்ளன

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானிகி ராஜரத்ன தெரிவிப்பு





(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)

ஆபத்தான பகுதிகள் மற்றும் ஆபத்தான வீடுகளில் வசிப்பவர்களுக்கு பாதுகாப்பான வீடுகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானிகி ராஜரத்ன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக ஆபத்துள்ள வீடுகளின் நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்ட பின்னர் இது குறித்த சிறப்பு கலந்துரையாடல் இரத்தினபுரி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சபரகமுவ ஆளுநர் இவ்வாறு கூறினார்.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தால் பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தலிங்கவின் வேண்டுகோளின் பேரில் இந்தச் சிறப்புக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை, கஹவத்த, புஸ்ஸல்ல உள்ளிட்ட பல தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர்.

நேற்று வெளியான தகவலின்படி, இரத்தினபுரி மாவட்டத்தில் இந்த மோசமான பேரிடர் காரணமாக 14, 448 குடும்பங்களை சேர்ந்த 56, 770 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று வீடுகள் முழுமையாகவும் 996 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. நான்கு வணிக நிறுவனங்களும் பகுதியளவு சேதமடைந்துள்ளன என்று இரத்தினபுரி மாவட்ட பேரிடர் அனர்த்த முகாமைத்துவ பிரிவு கூறுகிறது.

இதற்கிடையில், 339 தோட்டம் தொடர்பான குடும்ப (மலையாள) அலகுகள் தற்போது பாதுகாப்பான இடங்களில் உள்ளன. பெரும்பாலான குடும்பங்கள் அதிக ஆபத்துள்ள வீடுகளில் வசிப்பவர்கள். அவர்களை மீண்டும் அந்த வீடுகளில் மீள்குடியேற்ற முடியாது என்பதால், அவர்களை வேறு தற்காலிக இடங்களில் மீள்குடியேற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

தோட்ட வீடுகளுக்கு அருகில் இடிந்து விழும் அபாயத்தில் உள்ள தேக்கு, தீப்பெட்டி, தென்னை மற்றும் பலாப்பழம் போன்ற மரங்களை உடனடியாக அகற்றவும் முடிவு செய்யப்பட்டது.

தோட்டக் குடும்பத்தினர்களுக்கு சுகாதார வசதிகள், சாலைகள் மற்றும் முன்பள்ளி பகல்நேர பராமரிப்பு மையங்களை நிர்மாணிப்பதற்கு அரசு அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்றும் தோட்ட முகாமைத்துவங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், இந்திய அரசு இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டக் குடும்பங்களுக்கு 263 வீடுகளை புதிதாக அமைத்து வருகிறது. – என்றார்

தோட்டக் குடும்பங்களுக்கு அவர்களின் சொந்த நிலத்தில் வீடு கட்டும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது என்று பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

முன்னாள் சபகமுவ மாகாண சபை உறுப்பினரும் ஆளுநரின் இணைப்புச் செயலாளருமான புஷ்பகுமார திசாநாயக்க, குருவிட்ட பிரதேச சபையின் தலைவர் விகசித்த புஷ்பசூரிய, இரத்தினபுரி மாவட்ட மேலதிக செயலாளர் அமில சுரஞ்சித் விஜேரத்ன ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற கூட்டத்தொடரை சுமுகமாக நடத்த ஒத்துழையுங்கள்

## எதிர்க்கட்சிகளிடம் பிரதமர் மோடி வேண்டுகோள்

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கியுள்ள நிலையில், பிரதமர் மோடி எதிர்க்கட்சிகள் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்த ஒத்துழைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், வழக்கத்தைவிட சற்று காட்டமாக, நாடாளுமன்றத்தை முடக்கும் நாடகங்களை விடுத்து ஆக்கபூர்வமாக செயல்படுமாறு எதிர்க்கட்சியினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த ஜூலை 21 முதல் ஓகஸ்ட் 21 வரை நடைபெற்றது. மக்களவை, மாநிலங்களவையில் மொத்தம் 27 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிலையில், நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் இன்று தொடங்கியுள்ளது. இந்த கூட்டத் தொடர் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெற உள்ளது.



இந்நிலையில் நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியில் செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் மோடி,

“இந்தியா ஜனநாயக நாடு. ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை வலுப்பெற்று வருவதற்கான அடையாளம் தான் பிஹார் தேர்தல் வெற்றி. அதில் பெண்களின் பங்களிப்பு அளப்பரியது.

பிஹார் தேர்தல் தோல்வி தந்த அழுத்தத்தில் இருந்து எதிர்க்கட்சிகள் மீண்டு வர வேண்டும். வெற்றியின் ஆணவத்தையும், தோல்வியின் விரக்தியையும் வெளிப்படுத்தும் இடமல்ல நாடாளுமன்றம்.

எனவே, எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தை முடக்கி நாடகங்கள் நடத்துவதைத் தவிர்த்து, ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும். மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும். நாட்டுக்காக நாம் செய்ய வேண்டிய விஷயங்களைப் பற்றி விவாதிக்க வேண்டிய இடம்தான் நாடாளுமன்றம்.

நாட்டின் வளர்ச்சியே முதன்மையானது. நமது பொருளாதார வளர்ச்சி புதிய நம்பிக்கை தந்துள்ளது. இந்தக் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்த எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். கூட்டத்தொடரில், இளம் எம்.பி.க்கள், முதன்முறை எம்.பி.க்கள் அவையில் அதிகமாக பேச வேண்டும். அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

தேவைப்பட்டால் எதிர்க்கட்சிகள் சிறப்பாக செயல்பட நான் சில ‘டிப்ஸ்’ தருகிறேன். அவற்றைக் கொண்டு அவர்கள் இன்னும் நல்ல உத்திகளை வகுத்து அதன்படி செயல்படலாம்.” என்று கூறினார்.

# இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உதவ வேண்டும்

## மத்திய அரசுக்கு சீமான் வலியுறுத்தல்

இலங்கையில் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் உதவ வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“இலங்கையில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட கடும் மழைப்பொழிவில் அதிகளவானோர் உயிரிழந்துள்ள நிலையில், அங்கு வாழும் தமிழர்கள் பலர் தங்களின் வீடு மற்றும் உடைமைகளை இழந்து, உண்ண உண



வின்றி தவித்து வருகின்றனர்.

பாதுகாப்பாக தங்கவைக்க போதிய முகாம்கள்கூட இல்லாத நிலையில் மட்டைப்பந்தாட்டமைதானத்தில்தங்க வைக்கப் பட்டுள்ள நிகழ்வு மனதை கனக்கச் செய்கிறது. இப்பேரிழப்பில் தங்களது உடமைகளை இழந்து தவிக்கும் தமிழர்களை மீட்க தமிழக அரசும், மத்திய அரசும் உடனடியாக உரிய வாழ்வாதார உதவிகளைப் புரிய வேண்டும்.

மேலும், இலங்கை விமான நிலையத்தில் கடந்த 3 நாட்களாக உணவு கூட கிடைக்காமல் தவித்து நிற்கும் 150 தமிழர்கள் உட்பட 300 இற்கும் மேற்பட்ட மக்களை பாதுகாப்பாக தாயகம் மீட்டுவரவும், அதுவரை அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடனடியாக வழங்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# வலுவிழந்த ‘டித்வா’; சென்னையில் மழை

வங்கக்கடலில் நிலவிய டித் வா புயல், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலு குறைந்தது. இருந்தாலும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டில் அடுத்த இரண்டு நாள்களுக்கு மழை தொடரும் என்று வானிலை ஆர்வலர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில்,

“காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னைக்கு அருகே நிலை கொண்டுள்ளது. இது மேலும் 2 நாட்கள் சென்னை கடல்பரப்பை ஒட்டியே



நிலவும். இதனால் அடுத்த 2 நாள்கள் மழை நீடிக்கும் என எதிர்பார்க்கலாம்.

அடுத்த 24 மணி நேரத்தைப் பொருத்தவரை காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னை கடலை ஒட்டியே நிலவும் என்பதால், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டில் மழை தொடரும். சில நேரங்களில் சென்னை, காஞ்சி, செங்கை, திருவள்ளூர் மற்றும் அதன் சுற்றுவட்டார மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கத்தால் தமிழகத்தின் உள் மாவட்டங்களிலும், கடலோர மாவட்டங்களிலும் மழை பெய்யும். நீலகிரி, கோவை, ஈரோடு, டெல்டா மாவட்டங்கள், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# திறமையான இந்தியர்களால் அமெரிக்கா பலனடைந்துள்ளது

## எலான் மஸ்க் தெரிவிப்பு





அமெரிக்காவுக்கு வந்த திறமை யான இந்தியர்களால் அமெரிக்க தேசம் பலனடைந்துள்ளது என உல கின் முதல் பணக்காரரான எலான் மஸ்க் கூறியுள்ளார்.

அவருடன் அண்மையில் செரோதா நிறுவனத்தின் இணை நிறுவனர் நிகில் காமத் பாட்காஸ்ட் நிகழ்ச்சியில் உரையாடி இருந்தார்.

அது உலக அளவில் கவனம் பெற்றுள்ளது. இந்நிலையில், அதில் எலான் மஸ்க் பகிர்ந்து குறித்து விரி வாக பார்ப்போம். இதில் அமெரிக்கா வில் பணிபுரியும் இந்தியர்கள், அமெ ரிக்க குடியேற்ற விதிகள் மற்றும் தனது குடும்பம் குறித்தும் மஸ்க் பேசியுள்ளார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

“அமெரிக்கர்களின் பணியை பிற நாட்டினர் பறிப்பதாக சொல்லும் கூற்றை பொறுத்த வரையில் அது எந்த அளவுக்கு உண்மை என எனக்கு தெரியவில்லை. நிச்சயம் திறன் கொண்ட பணியாளர்களுக்கு பற்றாக் குறை உள்ளது என்பதை எனது நேரடி அனுபவத்தில் இருந்து சொல்ல முடியும். அவர்களை கண்டறிவது பெரிய சவாலாக உள்ளது. சவாலான பணிகளை மேற்கொள்ள திறமைசாலி கள் வேண்டும். எனது நிறுவனம் அதில் கவனம் செலுத்துகிறது.

எல்லை பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றத்தை நிச்சயம் தடுத்தாக வேண்டும். முந்தைய பைடன் தலை மையிலான ஆட்சியில் எல்லை பகுதிகளில் பலர் சட்டவிரோதமாக குடியேறினர். அதன் மூலம் ஆதாயம் அடைந்தனர். அதனால் சட்டவிரோத குடியேற்றம் கூடாது.

அமெரிக்காவுக்கு வந்த திறமை யான இந்தியர்களால் அமெரிக்க தேசம் பெரிதும் பலனடைந்துள்ளது. அமெரிக்காவுக்கு திறமைசாலிகளின் தேவை உள்ளது. எனது நிறுவனம் உட்பட பல நிறுவனங்கள் திறன் கொண்ட நபர்களுக்கு சராசரிக்கும் கூடுதலான ஊதியத்தை வழங்கு கிறது.

அதே நேரத்தில் சில நிறுவனங்கள் எச்1-பி விசாவை தவறாக பயன்படுத் துகின்றன. அது மோசமான போக்கு. அதை நிச்சயம் தடுத்தாக வேண்டும். ஆனால், அதற்காக எச்1-பி விசா வழங்குவதையே நிறுத்த வேண்டும் என சொல்வதை ஏற்க முடியாது. ஏனெனில் இங்கு திறமைசாலிகளுக்கு தேவை உள்ளது.

எனது இணையர் ஷிவோன் ஜிலிஸ் உடன் நான் பெற்ற மகன்க ளில் ஒருவருக்கு சேகர் என்ற இந்திய வம் சாவளியை சுட்டும் வகையிலான பெயரை சூட்டியுள்ளோம். சந்திரசேக ரின் நினைவாக இந்த பெயரை வைத் துள்ளோம். ஷிவோன் ஜிலிஸின் முன்னோர்கள் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள். அது எப்படி என்று எனக்கு தெரியாது. அதனால் இந்த பெயரை வைத்தோம்” என அவர் தெரிவித்தார்.

# சிறையில் இம்ரான்கான் உயிரோடு இருக்கிறார்!

## பி.டி.ஐ. கட்சி செனட் உறுப்பினர் தகவல்



“பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் அடிலா சிறையில் உயிருடன் இருக்கிறார். அவரை வெளிநாடு தப் பிச் செல்லும்படி பாகிஸ்தான் அரசு அழுத்தம் கொடுத்து வருகிறது.”

- இவ்வாறு பாகிஸ்தான் தெக்ரீக்-இ-இன்சாப் (பி.டி.ஐ) கட்சியின் செனட் உறுப்பினர் குர்ராம் ஜீஷன் கூறியுள் ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், ராவல்பிண்டியில் உள்ள சிறையில் கொலை செய்யப் பட்டார் என ஆப்கானிஸ்தானில் உள்ள சமூக ஊடகங்களில் கடந்த வாரம் தகவல் பரவியது.

சிறையில் உள்ள இம்ரான் கானை அவரது குடும்பத்தினர், அரசியல் கட்சியினர் சந்திக்க கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அனுமதி அளிக் கப்படவில்லை. இதனால் அவரது சகோதரிகள் சிறை வாசலில் போராட் டம் நடத்தினர். அவர்கள் மீது பொலி ஸார் தாக்குதல் நடத்தினர். இம்ரான் கான் உயிரோடு இருப்பதற்கான ஆதாரத்தை வெளியிட வேண்டும் என அவரது மகன் காசிம் கான் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் பி.டி.ஐ. கட்சியின் செனட் உறுப்பினர் குர்ராம் ஜீஷன், இம்ரான் கான் குறித்து தெரிவிக்கை யில்,

“இம்ரான் கான் அடிலா சிறையில் உயிரோடு இருப்பதாக எங்களுக்கு பாகிஸ்தான் அரசு உறுதி அளித்துள் ளது. அவரை தனிமைச்சிறையில் அடைத்து வைத்துள்ளனர். நாட்டை விட்டு வெளியேறி, அவருக்கு பிடித்த மான இடத்தில் அமைதியாக இருக் கும்படி பாகிஸ்தான் அரசு அழுத்தம் கொடுத்து வருகிறது. இதற்கு இம்ரான் கான் ஒப்புக் கொள்ள மாட்டார்.

இம்ரான் கானின் புகழை கண்டு பாகிஸ்தான் அரசு பயப்படுகிறது. அதனால்தான் அவரது படம் மற்றும் வீடியோ வெளியிட அவர்கள் அனு மதிக்கவில்லை.

கடந்த ஒரு மாதமாக அவரை குடும் பத்தினர் மற்றும் கட்சி தலைவர்கள் சந்திக்க விடாமல் அவரை தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருப்பது துரதிர்ஷ்டம். இது மனித உரிமை மீறல். ஏதோ ஒரு விஷயத்துக்காக அவருக்கு பாகிஸ்தான் அரசு அழுத் தம் கொடுப்பதுபோல் தெரிகிறது.

இம்ரான் கான் சிறையில் இருந் தாலும், அவரது செல்வாக்கு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அவரது பி.டி.ஐ. கட்சி பாகிஸ்தான் இளைஞர்களிடம் வலுவாக வேரூன்றியுள்ளது. அவரது கொள்கை பல தரப்பினரை ஈர்த்துள்ளது.

பி.டி.ஐ. கட்சிக்கு சிறந்த எதிர்கா லம் உள்ளது. இம்ரான் கான் சிறை யில் இருக்கும் படம் வெளிவந்தால், அது மக்களிடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், அவரது போட்டோவை வெளியிட பாகிஸ்தான் அரசு அனுமதிக்க வில்லை.” என்று கூறினார்.

கனடா முரசு
திங்கட்கிழமை | 01/12/2025

**வேலை தேடுபவர்கள் வீதம் கனடாவில் அதிகரித்துள்ளது**



02▶




# டிஜிட்டல் விசா அமைப்பை அறிமுகம் செய்தது கனடா

கனடா அரசு, சர்வதேச பயணிகளுக்கான விசா செயல்முறையை எளிமைப்படுத்தவும், வேகமாக்கவும், பாதுகாப்பை மேம்படுத்தவும் புதிய டிஜிட்டல் விசா அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தின் முதல் பைலட் நாடாக மொராக்கோ தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மொராக்கோ பயணிகள், இனி தங்கள் விசாவை மின்னணு வடிவில் பெற முடியும்.

பாரம்பரிய காகித ஆவணங்கள் அல்லது தூதரகம், தூதரக அலுவலகங்களுக்கு செல்வது தேவையில்லை.

விசா, பாதுகாப்பான டிஜிட்டல் தளத்தில் சேமிக்கப்படும். பயணிகள் தங்கள் ஆவணங்களை எளிதில் நிர்வகிக்க முடியும்.

02▶

# கனடா - அமெரிக்கா இடையில் உறவுகள் பேணப்படவேண்டும்

## ஒட்டாவா மாநகரசபை உறுப்பினர் கோரிக்கை

இரு நாடுகளுக்கும் இடையே வரி தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஒரு முட்டுக்கட்டையை எட்டியுள்ள நிலையில், கனேடிய மற்றும் அமெரிக்க நகரங்களுக்கு இடையிலான தொடர்பு இப்போது மிகவும் முக்கியமானது என்று ஒட்டாவா மாநகர சபை உறுப்பினரும் கனேடிய மாநகரசபைகள் கூட்டமைப்பின் துணைத் தலைவருமான டிம் டீர்நெய் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் Salt Lake City இல் நடைபெற்ற தேசிய நகரங்களின் லீக்கின் நகர உச்சி மாநாட்டிற்காக ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டார்




டீர்நெய் ,

இந்த மாநாட்டின் விளைவுகளில் ஒன்று, அரசாங்கத்தின் உயர் மட்டங்கள் என்ன செய்தாலும், இந்த நேரத்தில் நகரங்கள் மற்றொன்றை ஆதரிப்பதாகக் கூறும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

கனடாவைப் போலல்லாமல், அமெரிக்க நகரங்களில் அரசியல் கோடுகள் உள்ளன, ஆனால் அமெரிக்காவில் உள்ள அவரது பல சகாக்கள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து சலித்துவிட்டனர் என்றும் டிம் டீர்நெய் மேலும் கூறினார்.

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வர்த்தகத்திற்கு வரிகள் எவ்வளவு தீங்கு விளைவிக்கும் என்பதுடன் பொருளாதார தாக்கங்கள் குறித்து அமெரிக்க சகாக்களுக்குக் கற்பிக்க உதவும் என்றும் டிம் டீர்நெய் தெரிவித்துள்ளார்.




# வேலை தேடுபவர்கள் வீதம் கனடாவில் அதிகரித்துள்ளது

கனடா முழுவதும் உள்ள கடைகளில் மக்கள் சலுகைகளைத் தேடுகின்ற அதேநேரம், ஏனையவர்கள் வேலைகளைத் தேடுகிறார்கள்.

வேலை தேடும் இணையத்தளமான Indeed இன் கூற்றுப்படி, கடந்த ஆண்டு இதே காலப்பகுதியை விட இந்த ஆண்டு விடுமுறை பணியமர்த்தல் 12 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டை விட இது சற்று முன்னேற்றத்தை காட்டுகிறது என்று Indeed மூத்த பொருளாதார நிபுணர் Brendon Bernard கூறினார், ஆனால் 2023 உடன் ஒப்பிடும் போது வேலைவாய்ப்பு பதிவுகள் இன்னும் குறைந்துள்ளதாகவும், Job market வலுவாக இருந்த 2022 ஐ விட மிகவும் குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த சில ஆண்டுகளாக வேலை தேடுபவர்களுக்கு இது ஒரு கடினமான காலமாக இருந்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாத நிலவரப்படி, கனடாவின் வேலையின்மை விகிதம் 6.9 சதவீதமாகவும், 15 முதல் 24 வயதுடைய இளைஞர்களின் வேலையின்மை விகிதம் அதை விட இரு மடங்காக அதாவது 14.1 சதவீதமாக உள்ளது.



## டிஜிட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்ப கட்டத்தில், ஏற்கனவே கனடா விசா பெற்றுள்ள சிலர், பாஸ்போர்ட் ஸ்டிக்கருடன் சேர்த்து டிஜிட்டல் நகலையும் பெறுவார்கள்.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சகம் (IRCC), பயணிகளின் உண்மையான அனுபவங்களைப் பதிவு செய்து, அமைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த பைலட் திட்டத்தை தொடங்கியுள்ளது.

இது, பேப்பர் வேலை குறைத்து, நேரத்தை சேமித்து, பிழைகள் மற்றும் தாமதங்களைத் தவிர்ப்பதை உறுதி செய்யும்.

2025 முதல் பாதியில், 1,835 மொராக்கோ குடிமக்கள் கனடா குடியுரிமை பெற்றுள்ளனர்.

இது, ஆப்பிரிக்காவில் புதிய குடியுரிமை பெற்றவர்களில் 7 சதவீதம் ஆகும்.

பிரான்ஸ் மொழி பேசும் புலம்பெயர் மக்கள், குறிப்பாக கியூபெக் மற்றும் ஒன்ராறியோவில், மொராக்கோ சமூகங்கள் வலுவாக உள்ளதால், கனடா-மொராக்கோ உறவுகள் மேலும் வலுப்பெறுகின்றன.




இந்த டிஜிட்டல் விசா அமைப்பு, உலகளாவிய குடிவரவு மற்றும் பயண முறைகளில் முழுமையான டிஜிட்டல் மாற்றத்திற்கான முக்கிய படியாக கருதப்படுகிறது. மொராக்கோவில் வெற்றிகரமாக செயல்பட்டால், இது உலகளாவிய அளவில் நடைமுறைக்கு வரும் வாய்ப்பு அதிகம்.



# இரும்பு, மென்மரத் தொழில்களை பாதுகாப்பதற்கு கனடா நடவடிக்கை

அமெரிக்காவுடனான வர்த்தகப் போரால் பாதிக்கப்பட்டுள்ள கனேடிய இரும்பு உற்பத்தியாளர்கள் மற்றும் மென்மரத் தொழிலில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு உதவி விரைவில் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப் நிர்வாகத்தின் 50 சதவீத வரிகளால் பாதிக்கப்பட்டுள்ள இரும்புத் தொழிலைப் பாதுகாப்பதற்கான நடவடிக் கைகளை பிரதமர் மார்க் கார்னி அறி விப்பார் என்று நம்பத்தகுந்த அரசாங்க வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின் றன.

கனடாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இல்லாத நாடுகளிலிருந்து நாட்டிற்கு இறக்குமதி செய்யக்கூடிய இரும்பின் அளவுக்கான எல்லைகளை குறைப்பதும் இந்த நடவடிக்கைகளில் அடங்கும் என்று கூறப்படுகிறது.

அந்தத் தொகை 50 முதல் 20 சதவீதமாகக் குறையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த நடவடிக் கையால் கனேடிய இரும்பு உற்பத் தியாளர்கள் சுமார் 854 மில்லியன் டொலர் மதிப்புள்ள சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்வார்கள்.

கனடாவிற்குள் இரும்பு உற்பத் தியாளர்கள் மூலப்பொருளை கொண்டு செல்வதற்கான கப்பல் செலவுகளை 50 சதவீதம் குறைப்பதன் மூலம் இரும்பு உற்பத்தியாளர்களுக்கு உதவும் திட்டத்தை மத்திய அரசு அறிவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படும் கனேடிய மென்மரக் கட்டைகளுக்கான வரிகள் முதலில் 35 சதவீதமாக இருந்தன, ஆனால் கடந்த மாதம் ட்ரம்ப் அதை 45 சதவீத மாக உயர்த்தினார்.

அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய் யப்படும் கனேடிய மரக் கட்டை ரஷ்யாவை விட அதிக வரி விகிதத்தைக் கொண்டுள்ளது. நான் அதை அப்படியே விட்டுவிட விரும்புகிறேன், என்று பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

